**செய்தி வெளியீடு எண்: 04/11/2020** **நாள்: 07.11.2020**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் சேவை நேரங்கள் நாளை (08.11.2020) ஞாயிற்றுக்கிழமை முதல் நீட்டிக்கப்படுகின்றன**

சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் தற்போது காலை 07.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை இயக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள், பணியாளர்கள், மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் உள்நாட்டு / வெளிநாட்டு பயணிகளின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு மெட்ரோ இரயில் சேவைகள் நாளை 08.11.2020 (ஞாயிற்றுக்கிழமை) முதல் நீட்டிக்கப்படுகின்றன.

திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரை தினந்தோறும் காலை 05.30 மணி முதல் இரவு 11.00 மணி வரை மெட்ரோ இரயில் சேவைகள் இயக்கப்படும். உச்ச நேரங்களில் (Peak Hours) 7 நிமிட இடைவெளியிலும் மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் மெட்ரோ இரயில்கள் இயக்கப்படும்.

ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் மெட்ரோ இரயில் சேவைகள் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை உச்ச மணி நேரம் (Non-peak Hours) இல்லாமல் இயங்கும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மேற்கொண்டுள்ள பயணச்சீட்டு வழங்கும் முறை மற்றும் அனைத்து விதிமுறைகளையும் பயணிகள் பின்பற்றி முகக்கவசம் அணிந்து தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107**